க.கொ.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii




பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை (30.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

# மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா கவலை

## பேச்சுக்குத் திரும்புமாறும் வலியுறுத்தல்

(கொழும்பு)

வன்னி மற்றும் கொழும்பில் நடைபெற்ற தாக்குதல் களில் பொதுமக்கள் சிக்கிக் கொள்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா கவலையும் கண்டனமும் தெரி வித்துள்ளன. இதுகுறித்து இலங்கைத் தூதரகங்கள் அறிக் கைகளை வெளியிட்டுள்ளன. (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக் குண்டுத் தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலர் கண்டனம்



(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட இரு குண்டு வெடிப்பு சம்பவங் களிற்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தனது அறிக் கையில் கூறியுள்ளார். நேற்று முன்தினம் பான் கீ மூன் வெளியிட்ட அறிக்கையில்,

கொழும்பில் சமூக சேவைகள் அமைச்சுக்கு அருகா மையிலும் நுகேகொடவிலும் நடத்தப்பட்ட இரு குண்டு வெடி ப்பு சம்பவங்களுக்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் நடாத்தப்பட்ட 2 குண்டுத் தாக்கு தல்களைத் தொடர்ந்து தற்போது தீவிர பாதுகாப்பு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு நடவடிக்கை யின் ஒரு பகுதியாக மேல் மாகாண பாடசாலைகளை அரசாங் கம் மூடியுள்ளது.

அதேபோல் கொழும்பில் உள்ள 39 மாடி உலக வர்த்தக மையப் பகுதிக்குள் வாகனங்கள் நுழையவும் தடை விதிக்கப் பட்டுள்ளது. கடந்த 1997 ஆம் ஆண்டு உலக வர்த்தக மைய கட்டத் தொகுதியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 20 பேர் கொல்லப்பட்டனர். நூற்றிற்கும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இருவேறு இடங்களில் நேற்று இருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சூட் டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று மாலை 5.45 மணியளவில் பிறவுண் வீதி-நாவலர் வீதி இணையும் சந்தியில் உள்ள தொலைத் தொடர்பகத்திற்கு முன்பாக குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பிறவுண் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி தில்லைநடராசா (வயது 56) என்ற குடும்பஸ்தரே சுட்டுக்கொல் லப் பட்டுள்ளார் என யாழ். (08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று இரு சிங்களவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஐயங்கேணியில் நேற்றுக் காலை இரண்டு சிங்கள பொதுமக்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தளபாட வியாபாரிகளான அவர்களை அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் சுட் டுக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐயங்கேணி கிருஷ்ணர் கோவிலை அண்மித்த பகுதியில் உள்ள வீதியில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இருவரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

பாணந்துறையைச் சேர்ந்த (08 ஆம் பக்கம் பார்க்க)



## பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் நேற்றுப் பதவியேற்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதியாக பர்வேஷ் முஷாரப் நேற்று முறைப்படி பதவி ஏற்றுக்கொண்டார். அந்நாட்டு தலை மை நீதிபதி அவருக்கு பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

## கொழும்பு, வன்னித் தாக்குதல்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட 2 தாக்குதல்க ளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர் வாகப் பகுதிகளில் நடத்தப்பட்ட 3 தாக்குதல்

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் என நம்பப்படும் தற்கொலைக் குண்டு தாரி களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். 30ற்கும் மேற்பட்ட பொது



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதியாக பர்வேஷ் முஷாரப் நேற்று முறைப்படி பதவி ஏற்றுக்கொண்டார். அந்நாட்டு தலைமை நீதிபதி அவருக்கு பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முஷாரப் நேற்று முன்தினம் இராணுவத் தளபதி பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார். ஐ.எஸ்.ஐ. தலைவர் அஸ்பக் கஜானி (08 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட 2 தாக்குதல்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் நடத்தப்பட்ட 3 தாக்குதல்களுக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் என நம்பப்படும் தற்கொலைக் குண்டு தாரிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். 30ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டாயம் நிறுத்த வேண்டும். (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி வர்களை பேச்சுக்கு அழைக்க அரசு முயல்கிறது

## ப்பான் இணையத்தளத்திற்கு ஜனாதிபதி மகிந்த பேட்டி

(கொழும்பு)

மிழீழ விடுதலைப்புலிகளைப் பேச்சு தை மேசைக்கு அழைக்க விரும்புவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் ார். நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த த்தமாக இருக்கின்றோம் என ஜனாதிபதி த ராஜபக்ஷ அசாகி சிம்பன் என்ற இணையத்தளத்துக்குச் செவ்வி வழங்கியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இப்பொழுதுதான் முதன்முறையாக யப்பானிய ஊடக அமைப்பு ஒன்றுக்குச்செவ்வியளித்திருக்கின்றார். அடுத்த மாதம் யப்பானுக்கு விஜயம்செய்யவுள்ள ஜனாதிபதி, 11 வருட காலத்தின் பின் யப்பானுக்கு விஜயம் செய்யும் முதலாவது இலங்கை அரசியல் தலைவராவார். இலங்கை பெரும்பான்மையாக சிங்களவர்களையும் சிறுபான்மையாகத் தமிழர்களையும் கொண்ட ஒரு நாடாகும்.

பெரும்பாலும் (02 ஆம் பக்கம் பார்க்க)






பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு- 16 நாள் முன்னெடுப்புகள் Nov 25 - Dec 10

குடும்பம் அல்லது இல்லத்து வன்முறைகளுக்கு முகம் கொடுக்கும் சூழ்நிலையில் வாழும் பிள்ளைகள் சில சமயங்களில் தாமே தாக்குதல்களைப் புரிபவர்களாக மாற வாய்ப்புகள் அதிகம்.

பால்பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம் - 021 222 6922, 021 222 9671

(C-560)

## நாவலர் நினைவுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நாவலர் நினைவுப் பிரார்த்தனை வைபவம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் நாவலர் பெருமானின் அரும்பணிகள் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் நிகழ்த்தவுள்ளார்.

அராலி சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்று அன்னதானமும் இடம்பெறும்.

நிறைவுரையினை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து சிறப்பு அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (ச-5)

## சிறுவர்சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடாத்தும் சிறுவர் சங்கம நிகழ்வு-2007 சாவகச்சேரி திருப்புகழ் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலாளர் எஸ்.சீனிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி ப.நோ.கூ.ச தலைவர் செ.மகேஸ்வரனும், சாவகச்சேரி புனரமைப்புத் திட்ட அலுவலர் செல்வி எஸ்.மாதங்கியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-6)

## பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப்படை குண்டுத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புறநகர் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது வான்படையின் மூன்று கிபீர் வானூர்திகள் 12 வான் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

கிளிநொச்சி புறநகர் பகுதியான ஜெயந்திநகரில் நேற்று முன்தினம் பிற்பகல் 12.25 முதல் 20 நிமிடங்கள் தொடர்ந்து குண்டுகளை வீசி தாக்குதலை வான்படை வானூர்திகள் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இதில் 3 வீடுகள் அழிவடைந்தன.

வான்படை தாக்குதல் நடாத்திய பகுதிக்கு அருகாமையில் இயங்கிவரும் இராணுவத்தால் ஆதரவற்றோராக்கப்பட்ட சிறார்களை பராமரிக்கின்ற காந்தி சிறார் இல்லம், கிறிஸ்தவ அமைப்புக்களால் நடத்தப்படும் ஆரோகணம் சிறார் இல்லம் ஆகியவற்றிக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி இந்துக் கல்லூரி வளாகத்துக்குள்ளும் குண்டு சிதறல்கள் வீழ்ந்துள்ளன. இதனால் மாணவர்கள் பீதியடைந்து பதுங்கு குழிகளுக்குள் அடைக்கலமாகினர். (எ-5)

## குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் நேற்று நஷ்டஈடு வழங்கியது

நுகேகொட சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக தலா ஒரு இலட்சம் ரூபாவும் காயமடைந்தோருக்கு தலா 50ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

களுபோவில போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்த மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாட் பதியுதீன், அமைச்சர் ரோகித அபே குணவர்த்தனா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டுத் தொகையின் ஆரம்பக் கொடுப்பனவை நேற்று வழங்கினார்.

முதல்கட்ட கொடுப்பனவாக மரணமடைந்தவர்களுக்காக தலா 50 ஆயிரம் ரூபா அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. காயமடைந்தவர்களுக்கு முற்கட்ட கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் கருத்து தெரிவிக்கையில், மரணமடைந்தவர்கள் மற்றும் காயமடைந்தோர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் டாக்டர்களின் வைத்திய அறிக்கையை அடிப்படையாக வைத்தே வழங்கப்படும். குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக சென்று பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையானவற்றையும் இழப்புக்களுக்கான நஷ்டஈடுகளையும் தாமதமின்றி வழங்குமாறு ஜனாதிபதி எனக்கு பணிப்புரை விடுத்தார் என்றும் கூறினார். (எ-5)

## சாதாரண தரப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகம் தனது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் 4ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை க.பொ.த (சா/த) பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகளை ஆனைக்கோட்டை பொது நூலகத்தில் நடத்தவுள்ளது.

இதில் கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களிற்கான வழிகாட்டல் விரிவுரைகள் யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்களினால் வழங்கப்படவுள்ளமையினால் ஆர்வமுள்ள மாணவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வழிகாட்டல் கையேடுகள் இலவசமாக வழங்கப்படும். (அ)

## வழங்கற் கட்டளை பெற அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் நலிந்த பிரிவினருக்கான நவம்பர் மாதத்திற்கான உணவு விநியோக வழங்கல்கள் கட்டளை தற்போது மாவட்ட செயலகத்தின் மாவட்ட கண்காணிப்பு பிரிவினால் வழங்கப்பட்டு வருகிறது.

வழங்கல் கட்டளையை இதுவரை பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் இன்று அவற்றினை மாவட்ட கண்காணிப்பு பிரிவில் பெற்று கோப்பாய் களஞ்சியத்தில் இருந்து பொருட்களைப் பெற்று விநியோகத்தினை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசாங்கஅதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## தமிழீழ விடுதலைப் புலிகளை...

சிங்களவர்கள் பௌத்தர்களாக இருப்பது போல பெரும்பான்மையான தமிழர்கள் இந்துக்களாகவுள்ளனர். 1950 ஆம் ஆண்டு சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிங்கள அரசு, சிங்கள மொழியை உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையாகப் பிரகடனம் செய்ததுடன் பௌத்த மதப் பாதுகாப்பையும் மேற்கொண்டது. இதனைத் தமிழர்கள் எதிர்த்தார்கள். இதன் பயனாக தனி நாட்டு இயக்கம் உருவானது.

**சிவில் யுத்தம் வெடித்தது**

1983 ஆம் ஆண்டு இந்த முரண்பாடு அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் என அழைக்கப்படும் குழுவினருக்கும் இடையில் சிவில் யுத்தமாக வெடித்தது. 2002 ஆம் ஆண்டு இவ்விரு கட்சியினரும் யுத்த நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டனர். 2003 நவம்பரில் இந்த உடன்படிக்கை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வருடம் 2006 ஒக்டோபரிலிருந்து சிவில் யுத்தம் மீள ஆரம்பமானது. இரு குழுவினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்தது. 1983 ஆம் ஆண்டில் ஆரம்பமான இந்த சிவில் யுத்தத்தில் 70 ஆயிரம் மக்கள் உயிரிழந்ததாகக் கணக்கிடப்பட்டது. கடந்த வருடத்திலிருந்து மாத்திரம் 5 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டனர்.

இந்த செவ்வியில் ஜனாதிபதி ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டார். அவருடைய கூற்றுப்படி இவர்கள் தற்கொலைக் குண்டுதாரிகள், கட்டாயமாக சிறுவர்களைப் போர் வீரராக்கியவர்கள், ஆயுதக் கடத்தல்களில் ஈடுபட்டவர்கள்.

**புலிகளைப் பேச்சுக்கு அழைக்க அரசாங்கம் முயல்கின்றது**

ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நாங்கள் இந்தக் குழுவினருக்கு அழுத்தம் கொடுப்போம். பயங்கரவாதத்தை இந்தப் பூமியிலிருந்தே முற்றாக அழித்தொழிப்போம் எனவும் அரசாங்கப் படைகள் இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த முயற்சிப்பதன் மூலம் பேச்சுவார்த்தைக்கு அவர்களை வரச்செய்ய முயல்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் சில வெற்றிகளைப் பெற்றது. கிழக்கு மாகாணத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. ஆயினும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் அறிகுறி தென்படவில்லை. விடுதலைப்புலிகள் பலவீனமான நிலையில் ஒருபோதும் பேச்சு மேசைக்கு வர மாட்டார்கள் என சிலர் கூறுகின்றனர்.

முக்கியமாக விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த ஒரு குழுவினர் ஒத்துழைப்பே கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் வெற்றி பெற காரணமாக இருந்தது என கூறப்படுகின்றது.

**அரசியல் கட்சிகளின் முடிபின்படியே பேச்சு**

பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படும் என்பது அரசியல் கட்சி தலைவர்களால் தயாரிக்கப்படும் சமாதானத் திட்டத்தின் உள்ளடக்கத்திலேயே தங்கியுள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி, உள்ளூர் அமைப்புக்களுக்கு சுயாதிகம் வழங்கக் கூடியதான அதிகாரப் பகிர்வு பற்றி குறிப்பிட்டார்.

இத்திட்டம் மத்தியஅரசின் மேல் அதிருப்தி கொண்டுள்ள தமிழ் மக்களது குறைபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. சமாதானப் பேச்சுகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப் பகிர்வு யோசனை் எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதி தீர்மானிக்கப்படவிருந்த நிலையில் இக்குழு குறித்த தருணத்தில் கூட மாட்டாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சகல அரசியல் கட்சிகளினது கருத்துக்களை ஒருங்கிணைக்க வேண்டியுள்ளதால் கூடிய காலம் தேவைப்படுகின்றது எனவும் அவர் கூறினார். 2008 ஆம் ஆண்டு நவம்பர் அல்லது பெப்ரவரி மாதத்தில் இவர்கள் தமது ஆலோசனையை என்னிடம் சமர்ப்பிப்பார்கள் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையை ஏற்றுக் கொள்ளுமாறு சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென தான் விரும்புவதாகக் கூறினார். இவ்விதம் கூறியதன் மூலம் சர்வதேச சமூகம் குறிப்பாக யப்பான் இதில் தலையிடும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார்.

கடந்த பல ஆண்டுகளாக யப்பான், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் இடைத் தரகராகச் செயலாற்றி வருகின்றது. யப்பான் இவர்களுக்கிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதுடன் யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள சமுதாயத்தை மீளக் கட்டிஎழுப்புவது சம்பந்தமாக சர்வதேச மாநாடுகளையும்நடத்தியுள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தவும் இலங்கையை மீளக் கட்டிஎழுப்பவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள யப்பான், யசூசி அகாஷியை தனது பிரதிநிதியாக நியமித்துள்ளது. யப்பான் இலங்கைக்கு பெருமளவு நிதியுதவி வழங்கி வரும் ஒரு நாடாகும். இந் நிதியின் ஒரு பகுதி இந் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மின்சார வழங்கல் மற்றும் வீதிப் புனரமைப்பு போன்றவற்றிற்கு செலவிடப்படுகின்றது.

கடந்த ஆண்டில் மாத்திரம் இலங்கையில் 2 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் அநேகமானோர் தமிழர்கள் அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்கள். அரச பாதுகாப்புப் படையினரால் இவர்கள் கடத்தப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது.

நாட்டில் மனித உரிமைகள் சீர் கெட்டிருப்பது பற்றி அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகள் சிலவும் இலங்கை அரசை கடுமையாக விமர்சித்துள்ளன. இது சம்பந்தமாக ராஜபக்ஷவிடம் கேட்டபோது இதில் அநேகமானவை தவறான கருத்தின் அடிப்படையில் கூறப்பட்டவை என்றார். (து)

## ஆயிரத்து 234 மில்லியன் ரூபா வற்வரியில் மோசடி

### அமைச்சர் ஹக்கீம் சபையில் உரை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இதுவரை ஆயிரத்து 234 மில்லியன் ரூபா வற்வரி மோசடி நடைபெற்றுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அரசாங்க கணக்காய்வுக்குழுவின் அறிக்கையை அதன் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசியதாவது; இலங்கை தேசிய வருமான வரி திணைக்களத்தில் பாரியளவிலான மோசடிகள் நிகழ்ந்துள்ளன.

இதனை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். மோசடி குறித்த விசாரணைகள் சுயாதீனமாக நடைபெற வேண்டும்.

தற்போதைய தேசிய வருமான வரி ஆணையாளரை பதவி நீக்காமல் இந்த விசாரணைகளை மேற்கொள்வது கடினம். எனவே அவரை தற்காலிகமாக பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

வருமான வரி அதிகாரிகள் உரிய முறையில் வரியை அறவிடாது விட்டால் அதற்கு அவர்களின் கடமைகள் மீது சந்தேகப்படும் நிலை இன்று வந்திருக்கிறது.

பெரும்பாலான அதிகாரிகள் இந்த தவறை இழைத்திருக்கின்றனர். அத்துடன் இத்தகைய மோசடி நிகழ்ந்த 25 நிறுவனங்களை அடையாளம் கண்டிருக்கிறோம்.

அவற்றில் இரண்டு நிறுவனங்கள் தற்போது தமது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளன என்றார். அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய எதிரணியினர் பலர், அரசாங்கத்தில் எந்தளவிற்கு ஊழல் நிகழ்ந்துள்ளது என்பதற்கு இதுவும் ஒரு சான்று என்று தெரிவித்தனர். (ச-5)


**டுபாயில் வெற்றிடங்கள் யூ.ஏ.ஈ.–எம்.பி.எம்.கம்பனி**

(உடனடிப் பயணம்)

| இல. | தொழில் | சம்பளம் |
|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர் | டினார் 600/= |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர் | டினார் 500/= |

*விதிகளும் நிபந்தனைகளும்*

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18 -45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட் 375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3. தொலைபேசி 0112 370653, 0112 502719 (டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

(அ-556)



**டுபாய் ரெலிக்கொம் கேபிள் லைன் உதவியாளர்கள்**

(உடனடிப் பயணம்-ஆண்கள் மட்டும்)

சம்பளம் - 800 டினார்

*விதிகளும் நிபந்தனைகளும்*

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட் 375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3. தொலைபேசி 0112 370653, 0112 502719 (டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

# இன்று ஒரு தகவல்

## அதிகப் பிரசங்கி

"அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு" என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறாரே, உமக்குத் தெரியுமா? என்று கேட்டபடி வந்தார் நண்பர் ஒருவர். "நன்றாகத் தெரியுமே!" என்றேன். என்ன நன்றாகத் தெரியும் என்று என் மீது பாய்ந்தார் நண்பர். அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார் என்பது தெரியும் என்றேன் நான். நண்பர் ஏளனமாக என்னைப் பார்த்தார். வள்ளுவர் ஓர் உயரிய கருத்தைச் சொல் லியிருக்கிறார் – உமக்கு அதைப்பற்றித் தெரியாது... என்ன படிப்பு படித்தனீர் என்றார் நண்பர். சரி.. வள்ளுவர் என்பும் உடையார் பிறர்க்கு என்று சொல்லியிருக்கிறாரே... அந்த எலும்பைக் கொண்டு என்ன சொல்வது? ஆட்டுக்கால், மாட்டுக்கால், கோழிக்கால் போல மொற மொற வென்று கடித்துச் சாப்பிடுவதா என்று கேட்டேன்.. ஆமா... "என்பும் உடையார் பிறர்க்கு..." என்று கூறியிருக்கிறார். அதற்கு ஏதாவது உட்பொருள் இருக்கத்தான் வேண்டும். உமக்குத் தெரியுமா? என்று கேட்டார் நண்பர். இப்பொழுது நான் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தேன். நீர் ஒரு சைவன் என்று தினமும் நெற்றியிலே பட்டை அடித்துக் கொண்டு திரிகிறீர்.. புராண இதிகா சங்களைப் படித்து இருக்கிறீரா? இரண்டொரு தேவாரங்களை படித்தால் மாத்திரம் போதுமா? சைவ, வைணவ, சமண, பௌத்த, கிறிஸ்தவ நூல்களையெல்லாம் படிக்க வேண்டும். அப்படிப் படித்திருந்தால் தான் இப்படியான பாடல்களின் உட்பொருள் விளங்கும் என்றேன். நண்பர் பரிதாபமாக விழித்தார்.

சரி... ஒரு புராணக்கதை சொல்கிறேன் கேளும் என்றேன். முன்னொரு காலத்திலே ததீசி என்ற முனிவர் ஒருவர் இருந்தார். ஒரு முறை தேவர்களும் அசுரர்களும் தங்களது ஆயுதங்களை பத்திர மாக வைத்திருக்குமாறு அவரிடம் கொடுத்தார்களாம். அவர் அவ் வளவு ஆயுதங்களையும் விழுங்கிவிட்டார். அத்தனை ஆயுதங்களும் திரண்டு அவருடைய முள்ளந்தண்டுடன் சேர்ந்து விட்டனவாம். இந்த நிலையில் இந்திரனது வச்சிராயுதம் ஏதோ காரணத் தால் பழுதடைந்து விட்டதாம்.

இந்திரன் புதிய வச்சிராயுதம் செய்ய தகுந்த பொருளைத் தேடும் போது ததீசி முனிவரின் முள்ளந்தண்டுதான் அதற்கு உகந்த பொருள் என அறிந்தானாம். உடனே இந்திரன் அவரிடம் சென்று இருந்த போது ததீசி முனிவர் புன்முறுவலுடன் சரி தருகிறேன் என்று கூறி, தியானத்திலிருந்து உச்சந்தலையினூடாக உயிரை விட்டாராம். பின் இந்திரன் அவரது முதுகெலும்பை தேவதச்சனான மயனிடம் கொடுத்து அரசு சம்காரம் செய்வதற்காக புதிய வச்சிராயுதம் ஒன்றைக் கடைந்தெடுத்தானாம். இந்த விதமாக தன்னுடைய முதுகெலும்பையே கொடுத்தார் என்பதைத் தான் என்பும் உடையார் பிறர்க்கு என்ற அடி கூறுகிறது என்றேன்.

இந்த உலகத்திலே பிறந்தவர்கள் அன்பு மனம் கொண்டவர்களாக, இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்தும், செல்வர்கள் ஏழைகளுக்கு உதவியும், இரப்பவர்களுக்கு ஈய்ந்தும் ஒருவர்க்கொருவர் உதவியாக வாழ்ந்தால் உலகிலே பஞ்சம், பசி, பட்டினி, குரோதம், அழுக்காறு, அவா, இன்னாச்சொல் போன்றனவெல்லாம் அழிந்துவிடும். நான்தான் பெரியவன்; நானும் எனது குடும்பமும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மை வளர்ந்த காரணத்தினாலேதான் இன்றைய உலகம் இந்நிலையை அடைந்திருக்கிறது. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம் என்கிறார்கள் அறிஞர்கள். பசி என்று வந்தவனுக்கு புசி என்று ஒரு பிடிசோறு இட்டால், அதையுண்டதும் அவன் முகத்திலே ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை ஏது? என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பூமியிலே பிறந்தவர்கள் அனைவரும் ஒரு நாள் இறந்தேஆக வேண்டும். மரணம் எப்பொழுது என்ன விதத்தில் ஏற்படும் என்று கூறமுடியாது. ஆதலால் இந்த பூமியிலே வாழும் கொஞ்ச நாட்களில் ஏன் அன்புடையவர்களாக ஏன் வாழக்கூடாது என மனித குலம் நினைப்பதாகத் தெரியவில்லை.

இடம்பெயர்ந்த காலத்தில் காணி, பூமி, சொத்து, சுகம் அத்தனையையும் விட்டுவிட்டு ஓடியவர்களில் பலர் திரும்பி வந்ததும் காணிச் சண்டை, வேலிச்சண்டையென நீதிமன்றங்களுக்கு அலைவதையும் அடிதடி சண்டையில் ஈடுபடுவதையும் இன்று சர்வ சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஊரைவிட்டு வெளியேறியவர்கள் திரும்பிவர முடியாத நிலை ஏற்பட்டிருந்தால்.. என்பதை எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய நிலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் பிறரை நேசிக்கும் மனம் வேண்டும். அன்புதான் எல்லாப்பிரச்சினைகளையும் தீர்க்கும் சர்வரோக நிவாரணி. ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் இலங்கையை அரசு செய்த காலத்திலே மதப்பிரச்சாரத்துகாகப் பாதிரிமார்கள் ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்வது வழக்கம். இப்படித்தான் ஒரு பாதிரியார் தான் போகிற இடங்களில் எல்லாம் மக்கள் ஒற்றுமையாக, அன்புடன் வாழ வேண்டும் எனக்கூறி அதற்கு உதாரணமாக ஒரு கதையும் சொல்வாராம்.

ஓர் ஊரிலே ஒரு அரச இலையும் மண்ணாங்கட்டி ஒன்றும் நட்புடன் ஒன்றுக்கொன்று ஆதரவாக வாழ்ந்து வந்ததாம். பெருமழை பெய்தால் மண்ணாங்கட்டி மேல் அரசமிலை ஏறி மழைத்தண்ணீரால் மண்ணாங்கட்டி கரைந்துவிடாமல் பாதுகாக்குமாம். அதேபோல பெருங்காற்று அடித்தால் அரசமிலை மீது மண்ணாங்கட்டி ஏறி உட்கார்ந்து அது பறந்துவிடாமல் பாதுகாக்குமாம்!

இந்தக் கதையை பாதிரியார் அடிக்கடி கூறி மக்கள் ஒற்றுமையுடன், ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருவாராம். இப்படித்தான் ஒரு கிராமத்தில் ஒரு நாள் தனது பிரசங்கத்தின் போது இந்தக் கதையைக்கூறினாராம். அந்தக் கூட்டத்தில் குறும்புக்காரன் ஒருவன் இருந்தாராம். பாதிரியார் கதையை முடித்ததும் அவன் எழுந்து "சுவாமி ஒரு சந்தேகம்" என்றான். என்ன சந்தேகம் என்று கேட்டார் பாதிரியார்.

நீங்கள் கூறிய பிரகாரம் மழையும் காற்றும் தனித்தனியாக வந்தால் இலையும் மண்ணாங் கட்டியும் ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கலாம் ஆனால் பெருமழையும் பெருங்காற்றும் ஒன்று சேர ஏற்பட்டால் யாரால் யாருக்கு உதவமுடியும் சுவாமி என விநயமாகக் கேட்டானாம். "அதிகப் பிரசங்கிவாயை மூடு" என்றாராம் பாதிரியார்.

இப்படியான மதப்பிரசங்க நேரங்களால் பிரசங்கி சொல்வதைக் கேட்க வேண்டுமே தவிர கேள்விகள் கேட்கக்கூடாது என்பது பொதுவிதி.

**ராஜ்**

## அனலை தீவில் மின்சாரம் வழங்கல் விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு முழுவதும் மின்சாரம் விஸ்தரிப்பு வேலைகள் "நிக்கொட்" நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

தற்பொழுது மின் கம்பங்கள் நடும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-72)

## ஊர்காவற்றுறை பஸ் நிலையம் நவீனமயப்படுத்தப்படும்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் நவீன முறையில் புதிய பஸ் நிலையம் நிறுவப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்துள்ளார்.

யூநொப்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள இப் புதிய பஸ் நிலையத்தில் இ.போ.ச.வடபிராந்திய ஊழியர்கள் இரவில் தங்கக்கூடிய வசதிகள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் ஆகியனவும் அமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-72)

## பாடசாலை அதிபர்களுக்கு நிருவாகப்படி அதிகரிப்பு

கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கான நிருவாகப் படியை எதிர்வரும் 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக் கம் அதிகரித்திருப்பதாக அமைச்சின் செயலாளர் ஆரியரட்ண ஹேவகே அறிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவு அதிகரிப்பு பற்றி மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர்களுக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

மத்திய மகாவித்தியாலய அதிபர்களுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 375 ரூபாவிலிருந்து 750 ரூபாவாகவும் மகா வித்தியாலய அதிபர்களுக்கான கொடுப்பனவு 300 ரூபாவிலிருந்து 600 ரூபாவாகவும் கனிஷ்ட வித்தியாலய அதிபர்களுக்கான கொடுப்பனவு 225 ரூபாவிலிருந்து 450 ரூபாவாகவும் ஆரம்ப பாடசாலை அதிபர்களுக்கான கொடுப்பனவு 150 ரூபாவிலிருந்து 300 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (அ-5)

## இராசிபலன்

30.11.2007
(கார்த்திகை 14, வெள்ளிக்கிழமை)
சஷ்டி முற்பகல் 11.33 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 07.53 மணிவரை
இராகுகாலம் 10.44-12.14 மணிவரை
சுபநேரம் 06.14-07.44 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, ரோகநிலை, அதிக பிரயாசை. |
| இடபம் | இஷ்டசித்தி, சுபநிகழ்வு, அனனியர் சந்திப்பு, மனோதைரியம். |
| மிதுனம் | மனோசங்கடம், தொழிலில் ஆர்வம், கௌரவக்குறைவு, பொருள் விரயம். |
| கடகம் | தெய்வசிந்தை, வெகுமானம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, முயற்சி தாமதம், கோபப்படுதல், பிரயாணம். |
| கன்னி | தெய்வதரிசனம், சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய நன்மை |
| துலாம் | நண்பர்கள் உதவி, தொழில் முன்னேற்றம், பெருமையடைதல், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, உடல்உழைப்பு, உஷ்ண வியாதி, பிரயாணம். |
| தனுசு | கௌரவக்குறைவு, வேலைச்சுமை, அஜீரணக்கோளாறு, முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வதரிசனம், கலந்துரையாடல், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| கும்பம் | சுகவாழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வசிந்தை, புதிய திருப்பம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், வியாபார நன்மை, சொத்துப்பிணக்கு. |

வளவன்

## அமெரிக்க லொத்தர் விண்ணப்பம் இறுதித் திகதி டிசெம்பர் -2

2009ஆம் வருடத்திற்கான அமெரிக்க விசா லொத்தர் திட்டம் டிசம்பர் 2ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. ஆதலால் இதில் விருப்புடைய விண்ணப்பதாரிகள் இத்திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

பல்வகை விசா அல்லது பச்சை காட் லொத்தர் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரிகளை அமெரிக்காவில் குடியேற அனுமதிக்கிறது. விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான தகுதிகளாவன,

* இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய தீவுகளில் ஒன்றில் பிரஜாவுரிமை பெற்றிருத்தல்.

* க.பொ.த.சா/த அல்லது உயர் பாடசாலைப் பரீட்சையில் முக்கிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது இரண்டு வருடப் பயிற்சி உட்பட ஐந்து வருட வேலை அனுபவம் பெற்றிருத்தல் ஆகியனவாகும். இந்த லொத்தருக்கான பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித்திகதி டிசம்பர் 2ஆகும்.

இவ் லொத்தர் முற்றிலும் இன்ரநெற்றில் மின்னியல் சாதனங்கள் மூலம் நடாத்தப்படுகின்றது. கடதாசிகளில் பதிவுகள் அனுமதிக்கப்படவில்லை. இப்பதிவுகளை மேற்கொள்வதற்கான அரசதிணைக்களம் ஓர் இணையத்தளத்தை உருவாக்கியுள்ளது.

www.dvlottery.state.gov எனும் இணையத்தளத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். இது ஒன்று மட்டுமே இந்த லொத்தருக்கான இணையத்தளம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். ஒரு விண்ணப்பதாரி ஒருமுறை மட்டுமே பதிவினை மேற்கொள்ளலாம்.

ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகள் தானாகவே தாகுதியிழந்தமையாகக் கணிக்கப்படும். இவ் லொத்தருக்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது. (அ-6)

## கலாபூஷணம் விருது பெறும் தமிழ் கலைஞர்களின் விபரம்

(கொழும்பு)

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் கலாபூஷ ணம் விருதினை 40 தமிழ் கலை ஞர்கள் இம்முறை பெறவுள்ளனர். எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு 7 ஆனந்த குமாரசாமி மாவத்தையில் உள்ள ஜோன் டி சில்வா மண்டபத்தில் கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தேசிய மரபுரிமைகள் அமைச் சர் மஹிந்த யாப்பாவின் தலைமை யில் இவ்வைபவம் நடைபெறும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். 2007ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது பெறவுள்ள தமிழ் கலைஞர்களின் விபரம் வருமாறு.

**யாழ்.மாவட்டம்**

சிவரத்தினம் சண்முகவடி வேல்- இலக்கியம், நாடகம். நீ.வின் செண்டி போல் -நாட்டுக் கூத்து, செல்லத்துரை வரதராஜன் - ஓவியம், சிற்பம், செ.டானியல் பெலிக்கன் -நாட்டுக்கூத்து, ஞானகுமாரி சிவனேசன்- இசை, வீ.ஜெ. கொன்ஸ்ரன்ரைன் -நாடகம், நடேசன் இராமநாதன் - இசை, முத்து குமாரு தணிகாசலம் - நாட்டுக்கூத்து.

இராமசாமி குலசேகரம் -நாட்டுக் கூத்து, வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்- இசை, வஸ்தியாம்பிள்ளை யேக்கப்-நாட்டுக்கூத்து, மாரிமுத்து சிவரெத்தினம் -நாடகம், ஆறுமுகம் கந்தசாமி - சிற்பவேலை, இரத்தினம் இராசகோபால் - நாடகம் ஓவியம், முத்து குமாரு கோபாலகிருஷ்ணன் - கர் நாடக இசை, சின்னத்தம்பி ஸ்ரீதயாளன் - கதாப்பிரசங்கம்.

**கிளிநொச்சி மாவட்டம்**

அப்பாச்சி வல்லிபுரம்-நாட்டுக் கூத்து, முருகேசு செல்லத்துரை -நாட்டுக்கூத்து.

**முல்லைத்தீவு மாவட்டம்**

வ.ஆறுமுகம் தங்கவேலாயுதம் - ஊடகத்துறை இலக்கியம், பெரிய தம்பி அருளம்பலம்-கர்நாடகஇசை, நாட்டுக்கூத்து.

**மன்னார் மாவட்டம்**

கபரியேல் இமானுவேல் -இலக்கியம், நாட்டுக்கூத்து, அடைக்கலம் அந்தோனிமுத்து -இலக்கியம், நாடகம்.

**அம்பாறை மாவட்டம்**

சோமசுந்தரம் கணேசமூர்த்தி - கதாப்பிரசங்கம், பண் இசை, சுப்பிரமணியம் பரமநாதபிள்ளை -இலக்கியம்.

**மட்டு மாவட்டம்**

கமலாதேவி ஞானதாஸ்-நடனத் துறை, வீரசிங்கம் இராச மாணிக்கம் - நாட்டுக்கூத்து, ஆறுமுகம் அரசரெத்தினம் -இலக்கியம், இளையதம்பி பாக்கியராசா - ஊடகத்துறை இலக்கியம்.

**திருமலை மாவட்டம்**

அப்பாத்துரை சித்திரவேலா யுதம் - பாரம்பரிய வாத்தியம், நாடகம், வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் -கர்நாடக இசை, கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்- இசைத்துறை.

**வவுனியா மாவட்டம்**

இரத்தினசிங்கம் சிவசோதி - இசைத்துறை, பொன் தெய்வேந்திரன்-இசைத்துறை.

**நுவரெலியா மாவட்டம்**

அந்தோனிபபிள்ளை இமானுவேற்பிள்ளை மனோகரன்-நடிப்பு, பாடல், பாடல் இயற்றல்.

**மாத்தளை மாவட்டம்**


சில்வேஸ்டர் தோமஸ் சுவாம் பிள்ளை -சிற்பவேலை.

**கண்டி மாவட்டம்**

செபஸ்டியன் அன்ரனி ஜீவா- ஊடகத்துறை, இலக்கியம், நாராயணசாமி சிவலிங்கம் -நாதஸ்வரம்.

**கொழும்பு மாவட்டம்**

சத்தியவாகீசன் இராம்தாஸ்- இலக்கியம், நாடகம், அல்பிரட் மேரி ஜெயந்தி -நாடகம், செல்வராஜா நேசதுரை தியாகராஜன்-இசைத்துறை. (அ-5)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2ஆம் வருட முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எம்.பிரதீபன் பிரிவுபசார நினைவு நூலை வெளியிட்டு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனிடம் முதல் பிரதியை வழங்குவதையும் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன், பதிவாளர் வை.வைத்தியகுமார், கலாசார மன்ற காப்பாளர் கே.திலகநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# முகாமைத்துவ உதவியாளர் தரம் IIIற்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை

பரீட்சைத் திணைக்களத்தினால் ஜனவரி 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் IIIற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி 09.10.2007 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காத 20 பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. உரிய பரீட்சார்த்திகளுக்கு இது தொடர்பான அழைப்புக் க்டிதங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு;

ரி.பிரபாகரன்- மீசாலை, எஸ்.சிவநாயனி- ஆனைக்கோட்டை, வி.விஜயலதா-புங்குடுதீவு, ரி.வினுஜா -அச்சுவேலி, எஸ்.ஜெனோதினி -திருநெல்வேலி, ரி.கீர்த்தனா -மீசாலை, கே.மனோறஞ்சிதம்-காரைநகர், எஸ்.ஜே.நிரோஜன்-வட்டுக்கோட்டை, ஜி.சிவறஞ்ஜினி- புலோலி, பி.துஷ்யந்தினி -பருத்தித்துறை,பி.செல்வகுமார்-நல்லூர், சர்மிளா-மல்லாகம், எஸ்.குகசீலன் -கரவெட்டி, எஸ்.சிவதீபா-மிருசுவில், எஸ்.தீபா-பண்டத்தரிப்பு, ஆர்.பகீரதி-புலோலி, வி.சுகந்தி-திருநெல்வேலி, பி.தேனுகா-கொக்குவில், பி.நிவேதிகா-யாழ்ப்பாணம், எஸ்.சிவப்பிரியா-கரவெட்டி. (அ-6)

## பரிசுத்தினம் -2007

யாழ்ப்பாண வலயக் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான உள்ளக, பெரு விளையாட்டுக்கள், தடகளப் போட்டிகளுக்கான பரிசுத்தினம் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக இலங்கை வங்கி செயற்பாட்டு முகாமையாளர் நடராஜா சிவரட்ணம் கலந்துகொள்ள்வுள்ளார். வெற்றியீட்டிய வீரர்கள் பாடசாலைக் கொடியுடனும் பாடசாலை சீருடையுடனும் வருகை தருமாறு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.குமாரசுவாமி வேண்டுவதுடன் உரிய நேரத்திற்கு அரை மணித்தியாலம் முன்னதாக பொறுப்பாசிரியருடன் அணிவீரர்கள் வருகை தரும்படி வேண்டுவதுடன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ், வெற்றிக் கிண்ணம் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் அறியத் தருகின்றார். (அ-136)

## விநாயக சஷ்டி விரதம்

குப்பிழான் திருவருள்மிகு கற்கரைக் கற்பக விநாயகர் திருக் கோயில் சஷ்டி விரதம் இம் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 15ஆம் திகதி வரை மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மேற்படி 21தினங்களும் தினசரி மாலை 2.30மணிமுதல் விஷேட ஸ்நபனாபிஷேகமும், திருவிழா புராண படிப்பு என்பன நடைபெறும். 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் மாலை சதுர்த்தி அபிஷேகத்துடன் கஜமுகாசூரசங்காரம் நடைபெற்று இறுதி நாள் சனிக்கிழமை மகா கணபதிஹோமம், 108 கலசாபிஷேகம் இடம்பெறும். (அ-136)

## பெற்றோர் தினவிழா

நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க.பாடசாலை பெற்றோர் தினவிழா முதலாம் திகதி சனிக்கிழமை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.குகதாசனும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி கே.குணசேகரமும் யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனும் கலந்துகொள்ளவுள்ளார்கள். கௌரவ விருந்தினராக சென்பெனடிக்ற் தேவாலய அருட்தந்தை எ.லோறன்ஸ் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளார். (அ-136)

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ)

## மாதாந்த உதவி பணக் கொடுப்பனவு

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு மார்கழி 1 ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிவரை தபாலகங்களில் வழங்கப்படும் என்றும் பயனாளிகள் உரிய தபாலகங்களில் 10 ஆம் திகதிக்கு முன்னர் இக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறும், 10 ஆம் திகதிக்குப் பின்னர் இக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாதென்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் அறிவித்துள்ள்ளார். (அ-6)

## ஆயுள்வேத மருத்துவர்களுக்கான அபினைப் பெற்றுக் கொள்ளல்

வைத்திய தேவைகளுக்கான அபினை (Opium) பெற்றுக் கொள்ளல் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை 6ஆம் திகதி மு.ப 11 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து ஆயுள்வேத வைத்தியர்களையும், ஆயுள்வேத மருத்துவ சபையில் தங்களை வைத்தியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரியுள்ளார். (அ)




## பரீட்சைகள்

சைவபரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் பிரவேச, பால, பண்டிதர் பரீட்சை டிசம்பர் 21, 22, 23 ஆம் திகதிகளில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (நீராவியடி) நடைபெறவுள்ளதாக தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (அ)

## ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள்

ஊர்காவற்றுறை அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆடு வளர்ப்புக்கு 50 குடும்பங்களும், கோழி வளர்ப்புக்கு 90 குடும்பங்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கிராமசேவையாளர் பிரிவு வாரியாக தெரிவுசெய்ய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்பதற்கான ஊக்குவிப்பு உதவி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் நிதி உதவி மூலம் வழங்கப்படவுள்ளது.

ஆடு வளர்ப்பு சுயதொழில் உதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவியும் ஆடு வளர்ப்பது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த உதவித் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு 12 இலட்சத்த 95 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

கோழி வளர்ப்பில் ஈடுபடவுள்ள 90 குடும்பங்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இது இரண்டு கட்டங்களாக முதற் கட்டத்தில் 50 குடும்பங்களுக்கும் இரண்டாம் கட்டத்தில் 40 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. கோழி வளர்ப்பில் ஈடுபடவுள்ள குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் கோழிக்கூடு என்பனவற்றுடன் 15 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கப்படவுள்ளன.

சுயதொழில் உதவி கள் வழங்கப்படவுள்ள குடும்பங்க ளின் செயற்பாடுகள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் நேரடிக் கண்காணிப்பும், கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனை வழிப்படுத்தல்களும் வழங்கப்படவுள்ளன. (அ-5)



நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய பரிசளிப்பு விழா 10.11.2007 சனிக்கிழமை நடைபெற்றது. அவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் அவர்கள் குத்துவிளக்கேற்றுவதையும், அருகில் அதிபர் க.வடிவேல் மற்றும் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## எயிட்ஸ் தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள எயிட்ஸ் தின விழாவில், வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் எச்.ஐ.வி. எயிட்ஸ் தினம் தொடர்பான பாடசாலை மாணவர்களிடையே மாகாண மட்டத்தில் நடாத்திய எச்.ஐ.வி/எயிட்ஸ் பற்றிய சித்திரப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற கீழ்க் குறிப்பிட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுமெனவும் இம் மாணவர்களை தவறாது இந்நிகழ்வில் கலந்து பரிசில்களைப் பெறுவ தற்கு அனுப்பி வைக்குமாறும் பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் இதில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றார்.

வெற்றி பெற்ற மாணவர் விபரம்.

செல்வி அபர்ணா ஜெகநாதன்-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, செல்வன் மகாதேவன் ரகுநாதன்-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, செல்வன் மகேந்திரராசா நிசாந்தன்-ஏழாலை மகா வித்தியாலயம், செல்வி.ஜே.மதுராந்தி -இணுவில் மத்திய கல்லூரி,செல்வன் அருந்தவராஜா அஜந்-மல்லாகம் மகாவித்தியாலயம். (அ-6)

## சைவத் திருமுறை விழா

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்க சைவத்திருமுறை விழாவும், சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மூத்தநயினார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கிருஷ்ணேஸ்வரக் குருக்களின் ஆசியுரையும், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் ந.சிவகடாட்சத்தின் வாழ்த்துரையும், ஆசிரியர் திருமதி ந.சந்திரகுமாரின் வரவேற்புரையும் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம் பெறும். சங்கச் செயலாளர் (இளைப்பாறிய தபாலதிபர்) மு.சண்முகம் நன்றியுரை வழங்குவார். (அ-6)

## ஆறுமுகநாவலர் குருபூசை

### துர்க்கா மணி மண்டபத்தில்...

நல்லூர்தவப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவிமணிமண்டபத்தில் பண்டிதை, சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினரின் பண்ணிசையைத் தொடர்ந்து "19 ஆம் நூற்றாண்டில் நாவலர் ஆற்றிய சைவத் தமிழ்த் தொண்டு" எனும் விடயம பற்றி முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் சிறப்புச் சொற்பொழிவும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனின் சொற்பொழிவும் இடம்பெறும். (அ-6)

### நாவலர் கலாசார மண்டபத்தில்...

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் நாவலர் வீதி நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் பூசை, வழிபாடு, சொற்பொழிவு ஆகியன நடைபெறும். (அ)

### இந்துசமயப் பேரவையில்...

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தலைமையகத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு, இந்துசமயப் பேரவைத் தலைவர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நடைபெறவுள்ளது.நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் "நாவலர் பணிகள்" எனும் பொருளில் சிறப்புரை வழங்கவுள்ளார். (அ-6)

### நாவலர் மணி மண்டபத்தில்...

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை-2007, நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ் வரன் தலைமையில் நடை பெறும். நிகழ்வில் பேராசிரியர் சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும்,திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நல்லை திருஞான சம்பந்த ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளின் ஆசியுரையும், "நாவலர் பாரம்பரியமும் இன்றைய சூழ்நிலையும்" எனும் தலைப்பில், யாழ். போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் சைவப் புலவர் நா. நவராஜின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும். அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

நிகழ்வின ஆரம்பத்தில் திருநெல்வேலி அம்மன் கோவிலில் இருந்து ஆறுமுகநாவலருடைய திருவுருவப் படத்திற்கு விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்று, திருவுருவப்படம் அம்மன் கோவிலில் இருந்து கோயில் வீதி ஊடாக அறநெறிப் பாடசாலை மாணவர் களது திருமுறைப் பாடல்களுடன் நாவ லர் மண்டபத்திற்கு எடுத்துவரப்படும். (அ-6)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் கலாநிதி வைத்தீஸ்வர குருக்களின் தந்தையார் சிவஸ்ரீ கணபதீஸ்வர குருக்கள் ஞாபகார்த்தமாக கட்டப்படவுள்ள நூல் நிலையத்திற்கு E.S.P. நிறுவன உரிமையாளர் பே.நாகரெத்தினம் தேங்காய் உடைத்து ஆரம்பித்து வைப்பதையும் உதவி அரச அதிபர் அடிக்கல் நாட்டுவதையும், குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ஆ.குணரெத்தினம்,சிவதொண்டன் லோகநாதன், மகாராணி சோமசேகரம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# விசாரணைகளை துரிதப்படுத்தி விடுதலைக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## பயங்கரவாத புலனாய்வுப்பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் கோரிக்கை

தமக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தி, மிக விரைவில்தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அவதானிக்கும் குழுவிடம் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உருக்கமாக கோரிக்கை விடுத்தனர். ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அவதானிக்கும் குழுவின் உறுப்பினர்களான அமைச்சர் ராஜித சேனாரட்ண, பிரதி அமைச்சர் பி.இராதாகிருஷ்ணன் மற்றும் பிரதியமைச்சர் கே.ஏ.பாயிஸ் ஆகியோர் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட் டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் போதே கைதிகள் இவ்வாறு தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ்,முஸ்லிம் மற்றும் தமிழ்அரசியல் கைதிகள் 74 பேர் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிலும் 101 பேர் களுத்துறை- பூசா முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பேரில் 8 பேர் சிங்களவர்களாவர். 65 பேர் தமிழர்களாவர். ஒருவர் முஸ் லிம் கைதியாவார். தமிழ் அரசியல் கைதிகளில் 2 பெண்களும் உள்ளனர்.

பூசா முகாமில் 90 ஆண்களும் 11 பெண்களுமாக 101 அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஏதோவொரு வகையில் உறவினர்கள் என குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். இக்கைதிகள் சுமார் மூன்று வருடங்களிலிருந்து கடந்த 5 நாட்களுக்குள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு ,திருகோணமலை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, வென்னப்புவ,தெஹிவளை, திருக்கோவில்,சங்கமண்கந்தை, ரத்கம, மன்னார், கல்முனை, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, ஜா-எல, சேருநுவர, கல்கிசை, பொலனறுவை, மதவாச்சி, கிரித்தல,வாகரை ஆகிய பிரதேசங்களில் முப்படையினராலும் பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்ட 74 பேரே கொழும்பில் உள்ள பயங்கர வாத புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். குற்றமற்றவர்களை விடுவிக்கும் முகமாகவே பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை தாம் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் இவ்வாறானவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விரைவில் விசாரணை செய்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அவதானிக்கும் குழுவினர் தெரிவித்தனர்.

இக் குழுவின் பிரதிநிதிகளை சந்தித்த அரசியல் கைதிகள் ,தமது கைது தொடர்பாகவும் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் எடுத்துக் கூறியதுடன் தமது விடுதலைக்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறும் உருக்கத்துடன் கோரினர்.

தாங்கள் தமிழர்கள் என்பதற்காகவும் தமிழர் பிரதேசங்களில் பிறந்து விட்டோம் என்பதை காரணம் காட்டியும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அவதானிக்கும் குழுவினரிடம் தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகள் சிலர், தமக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளதாகவும் குறைப்பட்டனர்.

### ஜனநாயக வழிக்கு திரும்பி வாழ முடியாதா?

கைதிகளில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நான் 15 வருடகாலமாக புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டேன். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், ஜனநாயக வழிக்கு திரும்பி திருமணம் முடித்தேன். பொதுமகனாகவே அன்று தொடக்கம் இன்று வரை வாழ்ந்து வருகிறேன். இவ்வேளையில் என்னை பலமுறை கைதுசெய்தனர். இப்போதும் கைதுசெய்யப்பட்டிருக்கிறேன். புலிகள் இயக்கத்தில் இருந்து, ஜனநாயக வழிக்கு திரும்பி சுமுகமாக வழமுடியாதா? இதற்கு அரசாங்கம் இடமளிக்க மாட்டாதா? என்று கேள்வி எழுப்பினார்.

தனது கைது குறித்து மற்றொருவர் கூறுகையில், வடக்கில் பிறந்த ஒரே காரணத்திற்காக நான் கைதுசெய்யப்பட்டுள்ளேன்.இலங்கையில் பிறந்த ஒருவர் தலைநகருக்கு வரமுடியாத நிலை.நான் ஒரு ஆசிரிய ஆலோசகராக பணியாற்றிய போதும், என்னையும் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். முல்லைத்தீவு கல்வி வலய பரீட்சைக்கு வினாப்பத்திரங்களை தயார்ப்படுத்துவதற்காக கொழும்பு வந்த நான், இன்றுகைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளேன் என்று தெரிவித்தார். புலிகளின் நடமாட்டத்தையும் அவர்கள் பதுக்கிவைத்துள்ள பொருட்களையும் காட்டித்தந்தால், எம்மை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகஆசை வார்த்தை கூறிய படையினர்,காரியம் கைகூடியவுடன் எம்மைகைதுசெய்துவிட்டன் என்று மன்னாரில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சிலர் தெரிவித்தனர்.

திருமணம் முடிந்து 9 நாடகளுக்குள் கைதுசெய்யப்பட்டுள்ள கொழும்பில் பிறந்து வெள்ளைவத்தையில் வசித்துவரும் இளைஞர் ஒருவரும் தனது ஆதங்கத்தை காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளை அவதானிக்கும் குழுவினரிடம் வெளிப்படுத்தினார். அத்துடன், திருமணம்முடித்து கொழும்பு பார்க்க வந்த இளம் தம்பதிகளும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். தமது வாழ்க்கையை முன்கொண்டு செல்ல உதவிசெய்யுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரு பகுதியின் படத்தை வைத்திருந்தமைக்காக அயர்லாந்து பிரஜாவுரிமை பெற்ற தமிழர் ஒருவரும் சிங்கப்பூர் திரும்பும்வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். தனது மனைவியும் மூன்று பிள்ளைகளும் தனது விடுதலைக்காக காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

### கணனி பொறியியலாளர் கருத்து

இதேவேளை,பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெயயப்பட்டிருந்த ஒருவரின் கையடக்க தொலைபேசியில் தனது இலக்கம் இருந்தமைக்காக தான் கைதுசெய்யப்பட்டதாக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் கணனி பொறியியலாளராக பணியாற்றும் குணரட்ணம் பார்த்தீபன் (வயது 32)தெரிவித்தார். யாழ்.கொக்குவில் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர்,வெள்ளவத்தையில் வசித்து வருவதாகவும் கொழும்பில் உள்ள டெலிகொம் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றுவதாகவும் கூறியதுடன் நான் நிரபராதி என்றும் தெரிவித்தார். தனது விடுதலைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கோரினார்.

தமிழ் அரசியல் கைதிகள் பலர் ஆயுதங்கள் மீட்பு,குண்டுத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் இடம்பெற்ற வேளை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.இன்னும் சிலர் கொழும்பில் காரணமின்றி தங்கியிருந்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நந்தன முனசிங்க கூறினார்.

### குற்றமற்றவர்கள் விரைவில் விடுதலை

அமைச்சர் ராஜித சேனாரட்ன கருத்துத் தெரிவிக்கையில், அரசியல்கைதிகளுக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தேவையான வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். விசாரணைகளை துரிதப்படுத்தி,குற்றமற்றவர்களை விடுவிக்க வழிவகை செய்யுமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

அதற்காக நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். விரைவில் யாழ்ப்பாணம் சென்று,அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்துப் பேசவும் திட்டமிட்டுள்ளோம் என்று கூறினார்.

(அ-5)

# இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 150 கோடி டொலர்கள் ஈரான் உதவி

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 150 கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியை ஈரான் அரசாங்கம் வழங்க முன்வந்துள்ளது. சலுகை விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்வது உள்ளிட்ட முக்கிய 08 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டன. டெஹ்ரானில் அமைந்துள்ள ஈரானிய ஜனாதிபதி மெஹ்மூத் அகமத் நிஜாத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இரு நாட்டுத் தலைவர்கள் முன்பாக இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

'உமா ஓயா' அபிவிருத்தித் திட்டத்துக்குத் தேவையான நிதியில் 45 கோடி டொலர்களை மிகவும் குறைந்த வட்டியில் வழங்க ஈரான் முன்வந்துள்ளது. இது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தானது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நிதியையும் ஈரான் வழங்கும்.இதன் மூலம் தற் போது நாளொன்றுக்கு சுத்திகரிக் கப்படும் 50 ஆயிரம் டெரல் மசகுஎண்ணெய் 1 இலட்சத்து 50 ஆயிரம் பெரல்களாக அதிகரிக்கப்படும். இத்திட்டத்துக்கு 700 மில்லியன் டொலர்களை ஈரான் வழங்குவது தொடர்பாகவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

உலக சந்தையின் எரிபொருள் விலைகள் அதிகரித்துவருவதன் காரணமாக நெருக்கடிக்குள்ளாகும் இலங்கை போன்ற நாடுகளுக்கு குறைந்த விலையில் எரிபொருளை வழங்குவதற்கும் ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது. எரிபொருளுக்கு வழங்கவேண்டிய கடன் தொகையை 7 மாதங்களில் வழங்கவும் இலங்கைக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தகவல் ஊடகத்துறை அமைச்சுக்கும் ஈரானின் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களுக்கும் இடையில் ஒத்துழைப்புக்களை பரிமாறிக்கொள்வது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஈரானின் சுங்க மற்றும் கடல் மார்க்க நடவடிக்கைகளை இணைத்துக் கொள்வதற்கும் இதுதொடர்பான நிருவாக உதவிகளை இரு நாடுகளும் பெற்றுக்கொள்வதற்கும் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இலங்கையின் தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கையின் கால்நடை வளர்ப்புக்கு நிதி உதவி வழங்க ஈரானின் முதலீட்டுச்சபை முன்வந்துள்ளது. இவை தவிர இலங்கையின் வீடமைப்புத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியில் 150 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கவும் ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளது.

(ச-5)

# பின்லேடனிடமிருந்து புதிய செய்தி விரைவில்!

அல்-கொய்தா தலைவர் ஒஸாமா பின்லேடனிடமிருந்து ஐரோப்பியர்களுக்கு புதிய செய்தியொன்று விரைவில் கிடைக்கப் பெறும் என இஸ்லாமிய இணையத்தளமான அஸ் சஹாப் அறிவித்துள்ளது.

பின்லேடனின் உருவப்படத்துடன் வெளியான இந்த அறிவிப்பில் அவரிடமிருந்து எப்போது செய்தி வெளியிடப்படும் என்பது சம் பந்தமான தகவல் எதுவும் இடம்பெறவில்லை.

இத்தகைய அறிவிப்புகள் செய்யப்பட்டு 72 மணித்தியாலங்களுள் பின்லேடனின் செய்திகள் வெளியிடப்படுவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# சீனாவின் சிறுத்தை பாசம்



(ஜியான்)

அழிந்து வரும் வனவிலங்குகளை பாதுகாப்பதில் உலக நாடுகள் தீவிரம் காட்டி வருகின்றன. அதன் ஒருபகுதியாகத் தான் உடல் நலம் குன்றிய சிறுத்தையை ஸ்கேன் செய்வதற்காக தயார்படுத்துகின்றனர்.

கால்நடை மருத்துவர்கள் சீனாவில் உள்ள ஷாங்சி மாகாணத்தில் உள்ள ஜியான் நகரில் உள்ள மருத் துவமனையில்தான் இந்தக் காட்சி.

வனவிலங்குகளைப் பாதுகாப்பது குறித்து பல்வேறு சர்வதேச கருத்தரங்கு களை நடத்தி வருகிறது சீனா.

மேலும் வன விலங்குகளை கடத்துதல், சட்டவிரோதமாக விற்பனை செய்தல் உள்ளிட்டவற்றை தடுப்பதற்காக ஏற்றுமதி சட்டங்களில் கடுமையான விதிமுறைகளையும் பின்பற்றி வருகிறது.

(அ-5)

# சமூகநீதிக்கான உலக தினமாக பெப்ரவரி - 20 ஐ.நா.அறிவிப்பு

(நியூயோர்க்)

பெப்ரவரி 20 ஆம் திகதியை சமூகநீதிக்கான உலக தினமாக கடைப்பிடிப்பது என்று ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 20 ஆம் திகதி சமூக நீதிக்கான உலக தினமாக கடைபிடிப்பது என்று ஐ.நா.சபை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற் றியது. சபையின் 192 உறுப்பு நாடுகளும் ஒருமனதாக இந்த தீர்மானத்தை நிறைவேற்றின.


## உலக தரிசனம்

1995ஆம் ஆண்டு கோபன் ஹெகன் நகரில் நடந்த சமூக வளர்ச்சிக்கான உச்சி மாநாட்டின் கொள்கைகள், நோக்கங்கள் ஆகியவற்றுக்கு ஆதரவாக தேசிய அளவில் அன்றைய தினம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் வறுமையை ஒழிக்கவும் அனை வருக் கும் வேலை வாய்ப்பை அளிக்கவும் சமூக ஒற்றுமை தழைக்கவும் அந்த மாநாட்டில் உறுதி பூண்டனர் என்றும் அந்த உறுதியை நடைமுறைப்படுத்தவும் அந்த நாளில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

(அ-5)

# இது வெறும் உடை மாற்றம் தான் !



பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமைத் தளபதி என்ற பதவியையும் அதற்குண்டான பொறுப்புகளையும் புதிய தலைமைத் தளபதி ஜெனரல் அஷ்ஃபக் கியானியிடம் ஒப்படைக்கிறார் ஜெனரல் பர்வீஸ் முஷரப். ராவல்பிண்டி இராணுவ மைதானத்தில் புதன்கிழமை காலை வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.இராணுவத் தளபதி பதவியைதுறந்தாலும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளதால் அதிகாரம் கைமாறவில்லை.

# கொல்கத்தாவில் இன்று 2ஆவது டெஸ்ட்

## வீரர்களின் காயத்தால் பாகிஸ்தான் கவலை!

பாகிஸ்தான் கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. ஒருநாள் தொடரை இந்தியா 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3 டெஸ்ட் போட்டி தொடரில் டெல்லியில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 6 விக்கெற் வித்தியாசத்தில் வென்று 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.



இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்றுதொடங்குகிறது. இந்த டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றால் தொடரை கைப்பற்றிவிடும். இதனால் பாகிஸ்தானுக்கு இன்றைய டெஸ்ட் மிகவும் முக்கியத்துவம் வாய்ந் தது. ஆனால் வீரர்களின் காயத்தால் பாகிஸ்தான் அணி கவலையில் உள்ளது.

அணித்தலைவர் சோயிப்மலிக்குக்கு கால்பந்து பயிற்சியின் போது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இந்த காயத்தில் இருந்து அவர் இன்னும் குணமடையவில்லை. இதே போல வேகப்பந்து வீரர் சோயிப் அக்தர் காய்ச்சல் காரணமாக பயிற்சி பெறவில்லை. அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் விடுதலையானார். தான் பலவீனமாக இருப்பதாக அவரே தெரிவித்தார். தொண்டை வலிகாரணமாக முகமது சமியும், காய்ச்சல் காரணமாக மிஸ்பா-உல்ஹக்கும் நேற்றைய பயிற்சியில் பங்கேற்கவில்லை.

இன்றைய டெஸ்டில் சோயிப் மலிக், சோயிப் அக்தர் விளையாடுவது சந்தேகம் என்று கூறப்படுகிறது. மலிக் ஆடாவிட்டால் அவருக்கு பதிலாக பைசல்இக்பால் சேர்க்கப்படலாம். யூனுஸ்கான் அணித்தலைவராக இருப்பார். காயம் காரணமாக முதல் டெஸ்டில் விளையாடாத வேகப்பந்து வீரர் உமல்குல் காயத்தில் இருந்து குணமடைந்து உள்ளார் என்றாலும் அவர் இடம் பெறுவாரா என்பது உறுதியாக தெரியவில்லை.



போட்டிக்கான இந்திய அணியில் பெரும் பாலும் மாற்றம் இருக்காது என்றே கருதப்படுகிறது. டெல்லி டெஸ்டில் வெற்றிபெற்ற வீரர்களே இடம்பெறுவார்கள். யுவராஜ்சிங்குக்கு 11பேர் கொண்ட அணியில் வாய்ப்பு கிடைப்பது தொடர்ந்து கேள்விக்குறியாக உள்ளது.

தினேஷ் கார்த்திக் முதல் டெஸ்டில் சரியாக விளையாடாததால் அவருக்கு பதிலாக யுவராஜ் சிங்குக்கு வாய்ப்பு கொடுக்கலாம். ஆனால் தினேஷ்கார்த்திக்குக்கு சாதகமாக அணித் தலைவர் கும்ளே உள்ளார். முனாப் பட்டேல் பந்து வீச்சு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஒருவேளை அணியில் மாற்றம் செய்யப்பட்டால் அவருக்கு பதிலாக முரளி கார்த்திக் சேர்க்கப்படலாம். (5)

# ஐ.சி.எல் சர்வதேச வீரர்களுக்கு ஐ.பி.எல் இல் இணைய வாய்ப்பு

இந்தியன் கிரிக்கெற் லீக் (ஐ.சி.எல்) அமைப்பில் இணைந்த சர்வதேச வீரர்களுக்கு ஐ.பி.எல் அமைப்பில் வாய்ப்பு அளிக்கப்படும் என இந்திய கிரிக்கெற்சபை அறிவித்துள்ளது.

ஐ.சி.எல்.அமைப்புக்கு சவாலாக அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் இந்திய கிரிக்கெற் சபைகள் இணைந்து இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பை உருவாக்கின.

இவ்வமைப்பின் சார்பில் நடத்தப்படும் போட்டிகளில் சச்சின், மெக்ராத் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த உள்ளனர். ஐ.சி.எல்.போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் சர்வதேச வீரர்கள் தங்களது ஒப்பந்தத்தை ரத்து செய்தால் ஐ.பி.எல்.அமைப்பில் இணைந்து கொள்ளலாம் என பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ. துணைத்தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகையில்,

வெளிநாட்டு வீரர்கள் தங்களது ஒப்பந்தத்தை ரத்துசெய்துவிட்டு ஐ.பி.எல்.அமைப்பில் இணையலாம். இச்சலுகை வெளிநாட்டு வீரர்களுக்கு மட்டுமே பொருந்தும். உள்நாட்டு வீரர்களுக்கு இந்த வாய்ப்பை அளிப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம் என்றார். இதனால் லாரா உள்ளிட்ட வீரர்கள் ஐ.பி.எல். அமைப்பில் இணைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (5)

# ஐ.சி.எல் இன்று அதிரடி ஆரம்பம்

இந்தியன் கிரிக்கெற் லீக் (ஐ.சி.எல்) அமைப்பு நடத்தும் இருபது-20 கிரிக்கெற் தொடர் இன்று அதிரடியாக ஆரம்பமாகவுள்ளது.

இந்திய கிரிக்கெற் சபைக்கு (பி.சி.சி.ஐ) போட்டியாக இந்தியன் கிரிக்கெற் லீக் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்புக்கு, முன்னாள் இந்தியஅணித் தலைவர் கபில் தேவ் செயற்குழு தலைவராக உள்ளார். இந்திய கிரிக்கெற் சபை எதிர்ப்பு காட்டியதால் சர்வதேச அளவில் கிரிக்கெற் லீக்கிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை.



இருப்பினும் ஓய்வுபெற்ற கிரிக்கெற் வீரர்கள், தேசிய அணியில் வாய்ப்பு பெற முடியாத பலர் இவ்வமைப்பில் இணைந்தனர்.

அவர்களுக்கு மூன்று ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் ரூ.30 லட்சம் முதல் 3 கோடிவரை சம்பளம் தர இந்தியன் கிரிக்கெற் லீக் முன் வந்தது.

மேற்கிந்திய அணியின் முன்னாள் வீரர் பிரையன் லாரா, பாகிஸ்தானின் இன்சமாம், அப்துல் ரஸ்ஸாக், நியூசிலாந்தின் கிறிஸ் கெயின்ஸ், இலங்கையின் மார்வன் அத்தப்பத்து, ரஸ்ஸல் ஆர்னல்ட், உபுல் சந்தன ஆகிய சர்வதேச பிரபலங்களும் இணைய இவ்வமைப்பு வலுப்பெற்றது.

இந்தியன் கிரிக்கெற் லீக்கின் சார்பில் மும்பை சாம்ப்ஸ், கொல்கத்தா டைகர்ஸ், டில்லி ஜெட்ஸ், சண்டிகர் லயன்ஸ்,சென்னை சூப்பர் ஸ்டார்ஸ் மற்றும் ஐதராபாத் ஹீரோஸ் என ஆறு அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகள் மோதும் இருபது-20 கிரிக்கெற் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

இரண்டு வாரங்கள் நடக்கும் இத்தொடரின் முதல் போட்டியில் சண்டிகர் லயன்ஸ் அணி டில்லி ஜெட்ஸ் அணியை பஞ்சகுலாவில் எதிர்கொள்கிறது. போட்டிகளுக்கான டிக்கெற் விலையை பொறுத்தவரை மிகவும் குறைவு. ஒரு போட்டிக்கு இந்திய நாணயப்படி 100 ரூபா இரண்டு போட்டிக்கு ரூ.150 என டிக்கெற் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத் தொடர் குறித்து கிரிக்கெற் லீக் அமைப்பின் செயற்குழு தலைவர் கபில்தேவ் கூறுகையில், கிரிக்கெற் லீக் சார்பில் நடக்கும் இருபது-20 தொடரை எதிர்நோக்கி காத்திருக்கிறோம். தொடருக்கு ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என்றார். (5)

# ஆஸியில் சச்சின் தடுமாறுவார் -புக்கானன்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிகரமான பயிற்சியாளராக திகழ்ந்தவர் புக்கானன் அணி ''ஹற்ரிக்'' உலக கோப்பை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். இவர் சச்சினை ஆட்டமிழக்குவது எப்படி என்பதை வீடியோ அனாலைஸ் மூலம் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு சொல்லிதந்த பெருமை பெற்றவர்.



இந்தாண்டு இறுதியில் நடக்கவிருக்கும் இந்திய அணியின் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் குறித்து இவர் கூறியது, சச்சின் ஆட்டத்தின் ஆரம்பத்தில் தனது கால்களை சரியாக பயன்படுத்த மாட்டார். ஆரம்பத்தில் இவரால் முழுவீச்சுடன் துடுப்பெடுத்தாட முடிவதில்லை. இச்சமயங்களில் இவருக்கு ஷோட் போல் வீசினால் தடுமாறிவிடுவார். அதற்காக அனைத்து ஷோட் போலிலும் அவர் ஆட்டமிழந்து விடுவார் என்று சொல்ல முடியாது. இதற்கு அடுத்த பந்தை துல்லியமாக வீசினால் அவர் சிலிப் திசையில் பிடி கொடுத்து வெளியேறி விடுவார்.

இதை அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் நன்றாக ஞாபகம் வைத்துகொள்ள வேண்டும். சச்சின் ஒரு தலைசிறந்த வீரர் என்பதை மறுக்கமுடியாது. ஆனால் தற்போது அவரால் தொடர்ந்து சிறப்பாக செயல்பட முடிவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவர் இடதுகை பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதில் அதிக சிரமப்படுகிறார். இவருக்கு எதிராக ஜோன்சன் சிறப்பாக பந்து வீசக்கூடியவர் இவ்வாறு புக்கானன் தெரிவித்தார்.

# இந்திய டெஸ்ட் தொடர் ஆஷசுக்கு நிகர் -பிரட்லீ

(மெல்போர்ன்)

ஆஷல் தொடரை போன்று இந்திய தொடரும் விறுவிறுப்பானது என்கிறார் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ.

இந்திய அணி இந்தாண்டு இறுதியில் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் மேற் கொண்டு டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பற்கேற்கவிருக்கிறது. இவ்விரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வரும் டிசம்பர் 26ஆம் திகதி மெல்போர்னில் நடக்கிறது.

இங்கு தான் பிரட்லீ 8 ஆண்டுகளுக்கு முன் டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். இந்தியாவுடனான டெஸ்ட் தொடர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகள் மோதும் ஆஷஸ் தொடருக்கு நிகரானது என்கிறார் வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ. இது குறித்து அவர் கூறியதாவது,

காலம் விரைவாக ஓடுகிறது. 8 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுடனான எனது அறிமுக போட்டியில் 5 விக்கெற் கைப்பற்றினேன். இதை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் விளையாடுவது சவாலான விஷயம். தற்போது இந்திய தொடரும் அதிக விறுவிறுப்புடன் காணப்படுகிறது. இது ஆஷசுக்கு நிகரானது என்றே சொல்லலாம். கடைசியாக 2003-04 ஆம் ஆண்டு இந்தியா இங்கு வந்திருந்தது. அப்போது மெக்ராத் வோர்ன் இல்லாமல் தொடரை சமன் செய்தோம். இம்முறை தொடரை கைப்பற்றுவோம். எனது பந்து வீச்சு நன்றாக இருக்கிறது. அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து வெற்றிபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு பிரட்லீ தெரிவித்தார். (5)



# சச்சின்தான் ரோல்மாடல் - சானியா மிர்சா

(புதுடில்லி)

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர்தான் என்னுடைய ரோல்மாடல் என்று டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறியுள்ளார். இந்தியாவின் நம்பர் 1 டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா டெல்லியில் நேற்று முன்தினம் கூறியதாவது,




உலகின் தலைசிறந்த வீரர் சச்சின். அவரது சாதனைகளை பார்க்கும் இளைஞர்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். எனக்கும் சச்சின்தான் ரோல்மாடல். சாதிக்க வயது தடை இல்லை என்பதை சச்சினிடத்தில் கற்றுக் கொண்டேன்.

ஒருநாள் போட்டியை தொடர்ந்து டெஸ்ட் போட்டியிலும் அதிக ஓட்டம் குவித்து சச்சின் சாதிப்பார் என்பதில் உறுதியாக இருக்கிறேன். நாளுக்குநாள் அவரது ஆட்டம் சிறப்பாக இருக்கிறது.

சாதனை செய்வதால் சிலருக்கு பெருமை கிடைக்கிறது. மாறாக சச்சினால் சாதனைக்கு கௌரவம் கிடைத்துள்ளது. பாகிஸ்தான் அணியில் 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' அக்தரை எனக்கு பிடிக்கும். அவரது ஆக்ரோஷ பந்துவீச்சு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

டென்னிஸ் தரவரிசையில் தற்போது 27ஆவது இடத்தில் உள்ளேன் முதல் 10ல் வருவதே லட்சியம். அதற்காக கடுமையாக உழைக்க தயாராகிவிட்டேன். தற்போது காயத்திலிருந்து முற்றிலும் விடுபட்டு விட்டேன். வெற்றி தோல்வியைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு முறையும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சி செய்கிறேன்.



இந்தி, தமிழ், தெலுங்கு சினிமாவில் நடிக்க எனக்கு தொடர்ந்து பல அழைப் புகள் வந்தன. விளை யாட்டு, நடிப்பு இரண்டுமே வெவ்வேறு துறைகள். விளையாட்டில் சாதிக்கவே எனக்கு ஆசை. நடிக்க விருப்பம் இல்லை என சானியா கூறினார். (5)

# கொழும்பில் குண்டுகள் வெடித்த நிலையில் தொடர்ந்து விளையாட இங்கிலாந்து உறுதி

கொழும்பில் இரண்டு குண்டுகள் வெடித்துள்ள போதிலும் இங்கிலாந்துடனான தொடர் போட்டி இலங்கையில் நடைபெறுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரயாணம் தொடர்பான எச்சரிக்கையில் எவ்விதமாற்றமும் இல்லையென, சனிக்கிழமை முதலாவது தொடருக்காக கண்டி செல்லவுள்ள குழு நிர்வாகத்துக்கு, பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கண்டிக்குச் செல்வது பற்றிக் குழுதான் தீர்மானம் எடுக்கவேண்டும் என ஸ்தானிகராலயப் பேச்சாளர் ஜோன்துல்லி தெரிவித்துள்ளார். இரண்டாவது டெஸ்ட் டிசம்பர் 9-13ஆம் திகதிகளில் கொழும்பு S.S.C மைதானத்திலும் 3ஆவது டெஸ்ட் டிசெம்பர் 18-22ஆம் திகதியில் காலியிலும் நடைபெறவுள்ளன. (அ-5)

பொறுமையை எங்கு கை விடுகிறோமோ–அங்கு பலாத்காரம் உருவெடுக்கிறது.

– ருமேனியா

வலம்புரி

## பிரச்சினைகளை விவாதிப்பதற்கே நாடாளுமன்றமும் பிரதிநிதிகளும்

கிளிநொச்சியில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கான அனுமதியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா சபாநாயகரிடம் கேட்டிருந்தார். இதற்கு சபாநாயகரும் அனுமதி வழங்கியிருந்தார்.

எனினும் கிளிநொச்சியில் நடந்த விமானத் தாக்குதல் பற்றி விவாதிப்பதற்கு சபாநாயகர் அல்ல; அரசாங்கமே அனுமதி வழங்கவேண்டும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார்.

இலங்கையின் சட்டதிட்டங்கள் அனைத்தும் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. ஆனால் சட்டம் எல்லோருக்கும் பொதுவானதென்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அடிக்கடி மறந்து போகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு சபாநாயகரிடம் அனுமதி பெறுவதே வழமையான விடயம். அந்த அடிப்படையிலேயே கிளிநொச்சியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் பற்றி விவாதம் நடத்துவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா சபாநாயகரிடம் அனுமதி பெற்றுள்ளார்.

இவ்வாறு முன் அனுமதியுடன் விவாதம் நடத்த முற்பட்ட போது ஜே.வி.பியினர் அதனைக் குழப்பியுள்ளனர். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நாடாளுமன்றத்தின் நடைமுறைவிதிகள் தெரியாதவர்போல் நடந்து கொண்டார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கடந்தகால செயற்பாடுகள் ஜனநாயகத்தை சீரழிப்பதாக அமைந்துள்ளது. அமைச்சுப் பதவியை தக்க வைக்கவேண்டும் என்பதற்காக எதுவும் எப்படியும் கதைக்கலாம்; பேசலாம் என நினைப்பது தவறு.

நாடாளுமன்றம் மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கான மையமாகும். பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வைக் காண்பதை விடுத்து பிரச்சினைகளை ஒதுக்கிவிடுவதால் பிரச்சினை தீர்ந்துபோக மாட்டாது.

கடந்தகால அரசியல் வரலாற்றை புரட்டிப் பார்ப்போமேயானால் உண்மைகள் ஓரங்கட்டப்பட்ட துர்ப்பாக்கிய நிலையை நாம் காணமுடியும்.

இனத்துவ ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் அதற்கு நாடாளுமன்றமே வழிவகுக்க வேண்டும். பொதுத் தேர்தல் நடத்தி மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்தால் மக்கள் பிரதிநிதிகளின் கருத்திற்கு–அவர்களின் கேள்விகளுக்கு விளக்கமளிப்பது உரியவர்களின் கடமை.

இதை விடுத்து விமானத் தாக்குதல் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது. அதற்கு அரசின் அனுமதி பெறவேண்டுமென கூறுவதெல்லாம் எவ்வகையிலும் நியாயமாகாது.

இந்த உண்மையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் உணர்ந்து –ஏற்றுக்கொண்டால் பொதுமக்கள் அனுபவிக்கும் எத்தனையோ பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டு விடும்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை அதிகாரபூர்வமாக உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்

## விமல் வீரவன்ச வலியுறுத்தல்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உடனடியாக அதிகார பூர்வமாக இரத்து செய்ய வேண்டும் என்று ஜே.வி.பியினர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினர். ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றில் புதன்கிழமை பேசியதாவது, பிரபாகரன் தனது உரையில் தனி நாட்டை உருவாக்கித்தருமாறு அனைத்துலகத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தேசத்துரோகச்செயல் ஆகக்கருதப்பட்ட போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமான நோர்வே என்ற போலிசமாதான செயற்பாட்டுநாட்டிடமும் இணைத்தலைமை என்று தன்னை அடையாளப்படுத்தும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளிடமே பிரபாகரன் இந்த கோரிக் கையை விடுத்திருக்கிறார்.

ஏகாதிபத்திய வாதிகளால் கிழக்கு தீமோர் பிரிக்கப்பட்ட தற்கு காரணம் எண்ணெய் வளமே. அந்த வளத்தை சுரண்டவே இந்தோனேசியாவிலிருந்து கிழக்குத்தீமோரை பிரித்தனர். தற்போது சேர்பியாவுக்கு சொந்தமான கொசோவையும் ஐக்கிய நாடுகள் சபை பிரிப்பதற்கு நேட்டோ என்ற ஏகாதிபத்தியமே காரணமாகும் இப்படி தனக்கும் தனி நாட்டை உருவாக்கித் தருமாறு பிரபாகரன் ஏகாதிபத்தியவாதிகளிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

மேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் தகர்த்துவிட்டதாகவும் அதற்கு இனிமேல் புலிகள் பதில் சொல்லத்தேவையில்லை என்றும் அவர் தனது உரையில் மறைமுகமாக கூறியிருக்கிறார். அதாவது போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கமே தகர்த்துவிட்டதாக அவர் கூறுகிறார். ஆகவே அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன் படுத்தி போர்நிறுத்த ஒப்பந்தத்தை அதிகாரபூர்வமாக உடனடியாக இரத்துச்செய்யவேண்டும். அத்துடன் காலம் கடத்தும் ஸ்கண்டிநேவிய நாடுகளின் முதியவர்களை (போர்நிறுத்த கண் காணிப்பாளர்களை) எதற்காக இன்னமும் நாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

எனவே இச்சந்தர்ப்பத்திலாவது ஏற்கனவே எடுக்கத் தவறிய முக்கியமான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவவேண்டும் என்றார் அவர். (அ-5)

## எதிர்கால நடவடிக்கைகள் குறித்து யுனிசெப் தீவிரமாக ஆராய்வு

(கொழும்பு)

யுனிசெப் நிறுவனத்துக்கான கிறீன் சனல் அதிவிஷேட சலுகை விலக்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ள நிலையில் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் சட்டச் சிக்கல்கள் தொடர்பாகவும் கொழும்பிலுள்ள யுனிசெப் தலைமையகம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொழும்பிலுள்ள ஐ.நா. தலைமையக பேச்சாளர் கோர்டன் வைஸ் மேலும் கூறியதாவது, யுனிசெப் நிறுவனத்துக்கான கிறீன் சனலை ரெட்சனலாக மாற்றுவது தொடர்பாக எமக்கு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வில்லை.

உத்தியோகபூர்வ அறிவிப்பு எமக்கு கிடைத்த பின்னரே எமது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வோம் என்றார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம ,யுனிசெப்புக்காக கிறீன் சனல் சலுகையை விலக்கி கொள்வதாக தெரிவித்த போதும், இது தொடர்பாக எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-5)

## மாவட்ட இளைஞர் பல்கலைக்கழகங்கள் அமைக்க அமைச்சு நடவடிக்கை –அதிகாரி தகவல்

(கொழும்பு)

இளைஞர் விவகார அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மாவட்டம் தோறும் இளைஞர் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாது போன இளைஞர் யுவதிகளுக்கு வெளிவாரியாக பல்கலைக்கழக பட்டப்படிப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான இளைஞர் பல்கலைக்கழகம் மாவட்ட அடிப்படையில் அமைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

## இலங்கைப் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிட வேண்டுமென நெடுமாறன் கோரிக்கை

(டர்பன்)

இலங்கைப் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிட வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்தார்.

விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இரங்கல் கூட்டத்தில் பங்கேற்பதற்காக டர்பன் சென்றுள்ள அவர் நிருபர்களிடம் கூறியது. இலங்கை அரசின் தவறான கொள்கைகளால் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து பசி பட்டினியால் வாடுகின்றனர்.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் தொடர்ந்து மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அங்கு நடைபெறும் இனப் படுகொலையை தடுத்து நிறுத்த ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும் என்றார். (அ-5)

# உணவுப் பொட்டலங்கள் விவகாரம் அரசு-ஐ.நா. உறவைப்பாதிக்கும்!

(கொழும்பு)

யுனிசெப் இறக்குமதி செய்த உணவுப் பொட்டலங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கை ஐ.நா. சார்பில் இலங்கையில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகளுக்குத் தடையை ஏற்படுத்தும் என அரசுக்கு ஐ.நா. கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின் மூலம் இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பது,

யுனிசெப் மீது ஏற்கெனவே எழுந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நா. முழுமையான ஒத்துழைப்பை நல்கி வருகிறது. இதுபோன்ற நிலையில் யுனிசெப் உணவுப்பொட்டலங்களை இறக்குமதி செய்து விடுதலைப்புலிகளுக்கு அளித்து வருகிறது என்று இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யுனிசெப்பின் மூலம் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொட்டலங்கள் அனைத்தும் இலங்கையில் தங்கி மேம் பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ள ஊழியர்களுக்காகத் தான். இது குறித்து முன்னரே நாங்கள் விளக்கம் அளித்துள்ளோம்.

இது போன்ற நிலையில் சுங்கத்திணைக்களத்தினர் யுனிசெப் இறக்குமதி செய்த உணவுப் பொட்டலங்களை பறிமுதல் செய்துள்ளனர்.

அரசின் இந்த நடவடிக்கை ஐ.நா. சார்பில் இலங்கையில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகளுக்குத் தடையை ஏற்படுத்தும். அரசின் மீது உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்யும். அத்துடன் ஐ.நா. அமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பொதுவான உறவிலும் பாதிப்பு ஏற்பட வழிவகுக்கும்.

இலங்கையில் தொடர்ந்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள விரும்புகிறோம். எனவே இந்த விஷயத்தில் விரைவாக பதிலை எதிர்பார்க்கிறோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 45

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து குடும்பமாக வாழுகின்ற வாழ்க்கை இல்வாழ்க்கையெனச் சிறப்பாகப் பேசப்பட்டது. தமிழர் வாழ்வியலில் 'குடும்பம்' என்பது சமூகத்தின் இறுக்கமான கட்டமைக்கு உறுதியான தூணாக விளங்கியுள்ளது. மூன்று தலைமுறைகள் ஒன்றாக இயைவுபட்டு நின்று மகிழ்வாக வாழும் பயில்களமாக விளங்கியதைப் பல இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

குடும்பத்தின் சிறப்பான நிலைக்குப் பெண்ணே காரணம் ஆணுக்கு இல்வாழ்க்கையில் துணையாக இணையும் பெண் அடக்கமும் சுறுசுறுப்பும் அன்பும் உடையவளாக இருக்கவேண்டும். கணவனுக்குச் சினமூட்டி அவன் உயிரை வாங்கும் பெண் 'கூற்றம்' போன்றவள். அவனுக்குக் காலம் அறிந்து உணவிடாமையால் நோயாளனாக்கி விடுகிறாள். அதனால் அவள் தீராத நோயாகப் 'பிணியாக' விளங்குவாள். சமைத்த உணவைக் கணவனுக்குப் பரிமாறாமல் தான் முன்னே உண்பவள் 'பேய்' போன்றவள் என முன்னோர் கருதியுள்ளனர்.

பெண்ணுடைய கடமைகள் பரநலம் பேணுபவையாகும். அதிலும் ஆணுடைய செம்மையான வாழ்க்கைக்கு அவளுடைய நாளாந்தக்கடமைகள் பெரிதும் உதவும். உணவு சமைப்பதும் பரிமாறுவதும் குடும்பத்தவருடைய உடல்நலத்தைப் பேண எனப்பெண்ணிடம் கையளிக்கப்பட்ட பணிகளாகும். கணவனோடு எதிர்நின்று சொல்லாடும் பெண்மையால் அவன் சினம் பெருகும். பொறுமை எல்லை மீறும் வன்முறைச் செயற்பாடுகள் தொடரும். அது குடும்பச் சண்டை என நாள்தோறும் நடைபெறும்.

இன்று சமூகத்தில் பல குடும்பங்களில் இந்நிலை காணப்படுகிறது. அதனால் கொண்டவன் மட்டுமல்லக் குழந்தைகளும் பெரிதும் இடர்படுகின்றனர். அன்பும் அரவணைப்பும் பரிவும் கொண்ட பெண்மையின் இயல்புக்கு முரணான குணவியல்பைக் களைய வேண்டும் என்பதே புலமைச் சான்றோரின் இலக்காக இருந்தது. சமூகத்தின் செல்நெறியைச் சீர் செய்யப் பெண்மைதான் ஏற்றது. ஆனால் அப்பெண்மையே மாறுபட்டால் என்ன செய்வது? எனவே பண் டைய இலக்கியங்கள் பெண்மையின் முரண்பட்ட குணவியல்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பைக்களைய வேண்டிப் பல பாடல்களை யாத்துள்ளன.

நாலடியார் இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்டுள்ளது. சிறிது நேரம் அடுக்களையில் பெண் செய்யும் அருமையான பணி அனைவரையும் காக்கும் உன்னதமான பணி. தன்னோடு வாழ்வில் இணைந்த ஆணை உருவாக்கும் பெண் மாறுபடக்கூடாது என நல்லுரையாய் பாடல் ஒன்றைத் தந்துள்ளது.

எறியென்று எதிர் நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி –அட்டதனை
உண்டி உதவாதாள் இவ்வாழ்பேய் இம் மூவர்
கொண்டானைக் கொல்லும் படை

(நாலடியார்)

## யாழில் இருவேறு இடங்களில்...

வைத்தியசாலை தகவல்கள் தெரி வித்தன.

குறித்த குடும்பஸ்தரின் சடலம் நேற்றிரவு யாழ்.பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது.

இதேவேளை நேற்று பிற்பகல் அளவெட்டி மாகியப்பிட்டியில் இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் ஆயுததாரிகளின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சங்கானையை சொந்த இடமாகவும் அளவெட்டியில் வசித்து வருபவருமான பாலசுப்பிரமணியம் விஜயகுமார் (வயது 27) என்ற இளைஞரே கொல்லப்பட்டுள்ளார் என தெல்லிப்பழை வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப இளைஞனுக்கு ஒரு கை இல்லை எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் மானிப்பாய் பொலிஸாரினால் இன்று நடைபெறும். (ச-5)

## குண்டு வீச்சு நிறுத்தப்படமாட்டாது; நேற்று சபையில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதிகளை முற்றாக அழிக்கும் நோக்கில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் எதற்காகவும் நிறுத்தப்பட மாட்டாது;நிறுத்தவும் முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினால் முன்மொழியப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது புலிகள் பல கொலைகளை செய்துகொண்டே இருந்தனர். பேச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் யார்? புலிகளே சென்றனர். அவ்வாறு பேச்சுக்கு சென்ற புலிகளே மாவிலாறு அணைக்கட்டை மூடினர். அதற்கு பின்னரே அரசாங்கத்தினால் பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களை ஏன் நிறுத்துமாறு கோருகின்றனர். தகவல்களை சரியாக தேடியறிந்து ஆராய்ந்ததன் பின்னரே விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

அதுவும் புலிகளின் இலக்குகள் மீதே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறான இடங்களில் பொதுமக்கள் இருக்கின்றனர். படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களினால் பிரபாகரன் குழியின் விளிம்பில் இருக்கின்றார். அவரை காப்பாற்றுவதற்காகவே விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர் என்றார். (ச-5)

## கொழும்பு, வன்னி தாக்கு...

இலங்கையில் திட்டமிட்ட தாக்குதல்கள் மூலமாக அதிகரித்து வரும் வன்முறைகளால் பொதுமக்கள் கொல்லப்படுதல் மற்றும் படுகாயமடைதல் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை கொள்கின்றது.

இன மோதலில் தொடர்புடைய அனைத்துத் தரப்பும் பொதுமக்களைப் பாதுகாக்கும் அனைத்துலக விதிகள் மற்றும் மனிதாபிமான உதவிகளை அனுமதித்தல் ஆகியவற்றுக்கு இணங்கிச் செயற்பட வேண்டும். அரச படைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளும் அனைத்து வகையான அனைத்துலக மனிதாபிமான சட்டமீறல்களை உடனே நிறுத்த வேண்டும்.

இதனை மீளவும் செய்யாதிருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை 11 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறார்கள் கொல்லப்பட்டமைக்கு இன மோதலில் தொடர்புடைய இரு தரப்பும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

மளுவராயன்கட்டை அடம்பன் என்ற இடத்தில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை வளாகத்திற்குள் 7 எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் 2 ஆசிரியர்கள் மற்றும் 3 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

புலிகளின் குரல் மீதான வான்தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவிக்கின்றது. அத் தாக்குதலில் வானொலி நிலையப் பணியாளர்கள் மூவரும் ஆறு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

அனைத்துத் தரப்பும் வன்முறைகளை உடனே கைவிட்டு அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் சிறார்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## வவுனியாவுக்கான யாழ்தேவி சேவை ரத்து

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியாவுக்குச் சென்று வந்த யாழ் தேவி புகையிரதம் இனிமேல் அநுராதபுரம் வரைக்குமே செல்லும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பாது காப்பு அமைச்சின் இந்த அறிவுறுத்தல் புகையிரதத் திணைக்களத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து புகையிரத திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், பாதுகாப்பு அமைச்சினால் எங்களுக்கு பயண அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இனிமேல் வவுனியாவுக்கான பயணங்களை அநுராதபுரத்துடன் நிறுத்தி விடுமாறு அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியாவுக்கான யாழ்தேவி சேவைகளை மட்டுப்படுத்தவுள்ளோம். அநுராதபுரம் வரை புகையிரதத்தில் செல்லும் பயணிகள் வவுனியாவுக்கு பேருந்துகளில் செல்லலாம் என்றார். (ச-5)

## மட்டக்களப்...

இவர்கள் தளபாட வியாபாரத் திற்காகவே ஐயங்கேணிக்கு வந்திருந்தனர் என்றும் என்ன காரணத்திற்காக அவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர் என்பதை உறுதியாக கூற முடியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## பாகிஸ்தான் ஜனாதிபதியாக...

புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதி பதவியைத் துறந்த முஷாரப் நேற்று அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டார். பதவி ஏற்ற பின் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய முஷாரப், இராணுவம் தனக்கு முழு ஆதரவு தருவதாகத் தெரிவித்தார்.

தான் ஜனாதிபதியாக பதவி ஏற்றிருப்பதால் நாடு இனி வலுவடையும் என்றும் கூறினார். உலகிலேயே பாகிஸ்தான் இராணுவம் தான் மிகவும் சிறந்தது என்று கூறிய அவர், இராணுவத் தளபதியை தனக்கு 20 ஆண்டு காலமாகத் தெரியும் என்றும் கூறினார். முஷாரப் 5 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்றுக் கொள்வது இது 2- வது தடவை.

இராணுவத் தளபதி பதவியில் இருந்தபடியே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வழக்குத் தொடுக்கப் பட்டது. ஆனால் முஷாரப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை அவசர நிலைக்குப் பிறகு நியமிக்கப்பட்ட புதிய நீதிபதி தள்ளுபடி செய்தார்.

இதனையடுத்து முஷாரப் தேர்தலில் வெற்றி பெற்றது செல்லும் என்று அறிவிக்கப்பட்டு அவர் பதவி ஏற்க இருந்த தடையும் நீங்கியது. அந்நாட்டில் விரைவில் அவசர நிலை இரத்துச் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## கொழும்பில்...

மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தனர்.

புகையிரதங்கள், பேருந்துகள், மக்கள் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மேலதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பொலிஸ் பேச்சாளர் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோரை கைது செய்யவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## மக்கள் மீது நடத்தப்படும்...

கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் வன்னி, கொழும்பு ஆகிய மோதல் நிகழும் இடங்களில் பொதுமக்கள் சிக்கிக் கொள்வது குறித்து கவலைப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் திட்டமிட்ட வகையிலான பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவிக்கின்றது.

இத்தகைய தாக்குதல்களை எந்த அரசியலின் கீழும் நியாயப்படுத்த முடியாது. இது சாதாரண இலங்கையருக்கு ஆழ்ந்த துயரையும் பாதிப்பையும் ஏற்படுத்தும். பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வன்னி அல்லது கொழும்பு அல்லது எங்கேயானாலும் இலங்கை இன மோதலில் அப்பாவிப் பொதுமக்கள் சிக்கிக் கொள்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மீளவும் பாரிய கவலை கொள்கின்றது.

அனைத்துலக மனிதாபிமான சட்டத்தின்படியாக மேலதிகமாக பொதுமக்களுக்கான பாதிப்பை தொடர்புபட்ட தரப்புக்கள் தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் அமெரிக்க அரசாங்கம் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை கண்டிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடை ஒன்றினுள்ளும் மற்றும் வன்னியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற சிற்றூர்தி மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்வதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இம் இன முரண்பாடுகளுக்கு சமாதான வழியிலேயே தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் இராணுவழியில்அல்ல எனவும் அதில் மேலும்குறிப்பிடப் பட்டுள்ளது. (ச-5)

## கொழும்புக் குண்டுத் தாக்கு...

அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்றும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பொதுமக்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில் அமைதிப்பேச்சுக்களுக்கு திரும்ப வேண்டுமென்றும் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை வன்னியில் இடம்பெற்ற புலிகளின் குரல் வானொலி மீதான தாக்குதல், பாடசாலை மாணவர்கள் மீதான ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல் ஆகியவற்றிற்கு தனது கவலையையும் கண்டனத்தையும் அவர் வெளிப்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வன்னியில் வான் வழித்தாக்குதலினால் உலக உணவுத் திட்ட அலுவலகம் சேதமாக்கப்பட்டது தொடர்பிலும் அவர் கவலையை வெளிப்படுத்தியுள்ளார். (எ-5)


### உடன் தேவை

❖ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள்

❖ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள்

மேற்படி வெற்றிடங்களில் யாழ்.நகரத்தை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்

வலம்புரி,
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

### கலாவித்தகர் பட்டம் பெறவிருப்போரை வாழ்த்துகின்றோம்



யாழ்.மண்ணில் அழகுக் கலையில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர் திருமதி எம். கஜேந்தினி அவர்களினால் பரதநாட்டிய ஒப்பனை மிகச் சிறந்த முறையில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட உடை (கொஸ்ரின்) மற்றும் ஆபரணங்களுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் ஆற்றுகைக்குச் சிறந்த முறையில் ஒப்பனை செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலும் எமது நிறுவனத்தில் இந்து, கிறிஸ்தவ மணமக்கள் ஒப்பனை Facial, Eyebrow, Plucking, Waxing, Cakemakingபோன்ற அனைத்துத் தேவைகளுக்கும்,

கஜி அழகுக் கலை நிலையம்
கோப்பாய் தெற்கு, கோப்பாய்
(கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை முன்பாக)
தொலைபேசி:- 077 9363051

(C-368)

### அரிய சந்தர்ப்பம்.




D.V 2009 ஆம் ஆண்டுக்கான அமெரிக்கா லொட்றி வீசா விண்ணப்பம் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படும். முடிவு திகதிக்கு இன்னும் 5 நாள்களே உண்டு. உங்கள் பதிவுக்கு முந்துங்கள்!

திருமுருகன் கொம் நெற்
259,K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 7835
46, ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி T.P.021 222 7310

(C-367)

### சயன்ஸ் அக்கடமி

நல்லூர் ⟷ அரியாலை

❖தரம்: 4 முதல் O/L வரை
❖6. ENGLISH MEDIUM

புதிய வகுப்புகள் ஆரம்பம்
சனி (1-12-2007) 3.30 pm.

(649)

### புதிய கல்வி ஆண்டிற்கான புதிய பாட அலகுகள்

(தமிழ்/ஆங்கில மொழிமூலம்)

Dec 9ல் ஆரம்பம்

அனுமதிகள் Dec 8 வரை மட்டுமே வழங்கப்படும்.

1973 - 2008

"எம்முடன் இணைந்தோர் என்றும் உயர்ந்ததே வரலாறு" -அதிபர்

The Express Institute
Irupalai, Kopay.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.